300 மாணவர்கள் பயில்கிற அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரியில், புதிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

218—

தொழிற்பயிற்சி நிலையம்

***6494—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று தமிழக மக்களுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்ந்து, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் மக்களின் மனதை விட்டு மறையாத, நாங்கள் அனுதினமும் வணங்கும் எங்கள் குடும்ப தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். எங்களது தொகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளி 14, அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி 1, அரசு ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி 2, அரசு உயர்நிலைப் பள்ளி 8, ஆக, ஒரு ஆண்டிற்கு +2 வகுப்பில் 3,400 மாணவர்களும், 10 ஆம் வகுப்பில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் தேர்வு எழுதி, மேற்படிப்புக்காகச் செல்கின்றார்கள். இவர்கள் மேற்படிப்புக்குச் செல்ல வேண்டுமென்றால் மதுரை, தேனி அல்லது திண்டுக்கல் செல்ல வேண்டிய நிலையுள்ளது. என்னுடைய சோழவந்தான் தொகுதியில், ஆலங்கொட்டாரம் என்னுமிடத்தில் 1931 ஆம் வருடம், ஜூலை மாதம் 27 ஆம் தேதி தொடங்கப்பட்டு, அரசன் சண்முகனார் அரசு மேல்நிலைப் பள்ளி சுமார் 86 வருடங்களாக இயங்கி வருகின்றது. இந்தப் பள்ளிக்குச் சொந்தமாக 7 ஏக்கர் நிலம் மற்றும் 19,420 சதுர அடியில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடம் நல்ல முறையில் உள்ளது. இதில் தற்போதுள்ள மாணவர்களின் பயன்பாட்டிற்குப்போக, மீதம் 10 ஆயிரம் சதுர அடி கட்டடம் பயன்பாடற்று இருக்கின்றது. 4.2 ஏக்கர் நிலம் விளையாட்டு மைதானத்திற்காகவும், 80 சென்ட் இடம் தோட்டக் கலைக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பள்ளிக்கு அருகில் 3 அரசினர் மாணவர் விடுதிகள் உள்ளன; புகைவண்டி நிலையமும் உள்ளது. எனவே, அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய இந்தப் பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

[2017 ஜுலை 18

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டி அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில் 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 2,032 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றில், 1,970 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு 62 இடங்கள் காலியாக உள்ளன. மேலும், மதுரை மாவட்டத்தில் 18 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 2,608 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1,503 இடங்கள் காலியாக உள்ளன. இதில், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் 'லட்சுமி தொழிற்பயிற்சி நிலையம்' 126 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. அதில், 101 இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, 25 இடங்கள் காலியாக உள்ளன. இவற்றைத் தவிர, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி சுற்றுவட்டாரத்தில் 3 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 268 இடங்கள் நிரப்பப்பட்டு, 326 இடங்கள் காலியாக உள்ளன. இவை, இப்பகுதியிலுள்ள மாணவ, மாணவியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளன. எனவே, இப்பகுதியில் புதிய தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் அரசு சார்பில் தொழிற்பயிற்சி நிலையம் இல்லை என்பதால்தான் நான் கேள்வி கேட்டிருக்கின்றேன். அங்கு தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்குப் போதுமான இடவசதி உள்ளது. அந்தப் பள்ளி வளாகத்திலேயே 10,000 சதுர அடி காலியிடம் உள்ளது. மாணவர்கள் தங்குவதற்குத் தேவையான விடுதிகளும் அங்கே கட்டப்பட்டு, அதிலும் மாணவர்கள் நிரப்பப்படாத நிலை உள்ளது. விளையாட்டு மைதானத்திற்குத் தேவையான இடம் அங்கே ஒதுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து உள்ளிட்ட

2017 ஜூலை 18]

அனைத்து வசதிகளுக்கும் தேவையான இடம் அங்கே இருக்கின்ற காரணத்தினால், அரசு சார்பில் அந்த இடத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்றால், 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது. உறுப்பினர் அவர்கள் இடமும், அதற்குத் தேவையான பல வசதிகளும் இருக்கின்றன என்று கூறியிருக்கின்றார்கள். அவற்றை துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

219—

குடமுழுக்கு

***1571—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி, சோழமாதேவியிலுள்ள அருள்மிகு கயிலாயமுடையார் சிவன் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி, சோழமாதேவி, அருள்மிகு கயிலாயமுடையார் சிவன் கோயில் என்றழைக்கப்படும்